01-02-2025  Hindi
01-02-2025  Tamil

प्रात:मुरली  ओम् शान्ति  "बापदादा"'
காலை முரளி  ஓம் சாந்தி  பாப்தாதா

मधुबन
மதுபன்

“मीठे बच्चे - तुम आत्माओं का स्वधर्म शान्ति है, तुम्हारा देश शान्तिधाम है, तुम आत्मा शान्त स्वरूप हो इसलिए तुम शान्ति मांग नहीं सकते''
இனிமையான குழந்தைகளே! ஆத்மாக்களாகிய உங்களது சுய தர்மம் அமைதியாகும், உங்களது தேசம் சாந்திதாமம் ஆகும், ஆத்மாக்களாகிய நீங்கள் சாந்த சொரூபமானவர்கள். ஆகையால் நீங்கள் அமைதியை யாசிக்க முடியாது.

प्रश्नः तुम्हारा योगबल कौन-सी कमाल करता है?
கேள்வி:உங்களது யோக பலம் என்ன அதிசயம் செய்கிறது?

उत्तर:योगबल से तुम सारी दुनिया को पवित्र बनाते हो, तुम कितने थोड़े बच्चे योगबल से यह सारा पहाड़ उठाए सोने का पहाड़ स्थापन करते हो।
பதில்:யோக பலத்தின் மூலம் நீங்கள் முழு உலகையும் தூய்மையாக ஆக்குகிறீர்கள். நீங்கள் மிகக் குறைந்த குழந்தைகள் யோக பலத்தின் மூலம் இந்த முழு மலையையும் அகற்றி விட்டு தங்க மலையை ஸ்தாபனை செய்கிறீர்கள்.

5 तत्व सतोप्रधान हो जाते हैं, अच्छा फल देते हैं।
5 தத்துவங்களும் சதோ பிரதானம் ஆகிவிடுகிறது, நல்ல பழங்களை கொடுக்கும்.

सतोप्रधान तत्वों से यह शरीर भी सतोप्रधान होते हैं।
சதோ பிரதான சரீரத்தின் மூலம் இந்த சரீரமும் சதோ பிரதானமாக இருக்கும்.

वहाँ के फल भी बहुत बड़े-बड़े स्वादिष्ट होते हैं।
அங்கிருக்கும் பழங்கள் பெரியதாகவும், மிக மிக சுவையானதாகவும் இருக்கும்.

ओम् शान्ति।
ஓம்சாந்தி.

जब ओम् शान्ति कहा जाता है तो बहुत खुशी होनी चाहिए क्योंकि वास्तव में आत्मा है ही शान्त स्वरूप, उसका स्वधर्म ही शान्त है।

எப்பொழுது ஓம்சாந்தி என்று கூறப்படுகிறதோ அப்பொழுது மிகுந்த குஷி ஏற்பட வேண்டும். ஏனெனில் உண்மையில் ஆத்மாவானது சாந்தி சொரூபமானது ஆகும், அதன் சுய தர்மமே அமைதியாகும்.

इस पर संन्यासी भी कहते हैं, शान्ति का तो तुम्हारे गले में हार पड़ा है।
இதைப் பற்றி சந்நியாசிகளும் கூறுகின்றனர் - அமைதி என்ற மாலை உங்களது கழுத்தில் இருக்கிறது.

शान्ति को बाहर कहाँ ढूँढते हो।
அமைதியை எங்கு வெளியில் தேடுகிறீர்கள்?

आत्मा स्वत: शान्त स्वरूप है।
ஆத்மா இயற்கை யாகவே சாந்தி சொரூமானது.

इस शरीर में पार्ट बजाने आना पड़ता है।
இந்த சரீரத்தில் நடிப்பு நடிக்க வரவேண்டியிருக்கிறது.

आत्मा सदा शान्त रहे तो कर्म कैसे करेगी?
ஆத்மா சதா சாந்தமாக இருந்தால் பிறகு காரியங்கள் எப்படி செய்யும்?

कर्म तो करना ही है।
காரியங்கள் செய்தே ஆக வேண்டும்.

हाँ, शान्तिधाम में आत्मायें शान्त रहती हैं।
ஆம், சாந்திதாமத்தில் ஆத்மாக்கள் சாந்தியாக இருக்கும்.

वहाँ शरीर है नहीं, यह कोई भी संन्यासी आदि नहीं समझते कि हम आत्मा हैं, शान्तिधाम में रहने वाली हैं।
அங்கு சரீரம் கிடையாது, ஆனால் இதை எந்த சந்நியாசி போன்றவர்களும் புரிந்து கொள்வது கிடையாது - நான் ஆத்மா, சாந்திதாமத்தில் வசிக்கக் கூடியவன்.

बच्चों को समझाया गया है - शान्तिधाम हमारा देश है, फिर हम सुखधाम में आकर पार्ट बजाते हैं फिर रावण राज्य होता है दु:खधाम में।
குழந்தைகளுக்கு புரிய வைக்கப்பட்டிருக்கிறது - சாந்திதாமம் நமது தேச மாகும், பிறகு நாம் சுகதாமத்திற்கு வந்து நடிப்பை நடிக்கிறோம், பிறகு இராவண இராஜ்யத்தில் துக்கம் ஏற்படுகிறது.

यह 84 जन्मों की कहानी है।
இது 84 பிறவிகளின் கதையாகும்.

भगवानुवाच है ना अर्जुन प्रति कि तुम अपने जन्मों को नहीं जानते हो।

பகவானின் மகாவாக்கியம் அர்ஜுனனுக் காக இருக்கிறது அல்லவா! - நீ உனது ஜென்மங்களைப் பற்றி அறியவில்லை.

एक को क्यों कहते हैं?
ஒருவரை மட்டும் ஏன் கூறுகின்றார்?

क्योंकि एक की गैरन्टी है।
ஏனெனில் ஒருவருக்குத் தான் உத்திரவாதம் கொடுக்கலாம்.

इन राधे-कृष्ण की तो गैरन्टी है ना तो इनको ही कहते हैं।
இந்த இராதை கிருஷ்ணருக்கு உத்திரவாதம் இருக்கிறது அல்லவா! ஆக இவர்களுக்குத் தான் கூறுகின்றார்.

यह बाप भी जानते हैं, बच्चे भी जानते हैं कि यह जो सब बच्चे हैं सब तो 84 जन्म लेने वाले नहीं हैं।
இதை தந்தையும் அறிவார், குழந்தைகளும் அறிவீர்கள் - அனைத்து குழந்தைகளும் 84 பிறவிகள் எடுக்கக் கூடியவர்கள் கிடையாது.

कोई बीच में आयेंगे, कोई अन्त में आयेंगे।
சிலர் இடையில் வருவர், சிலர் கடைசியில் வருவர்.

इनकी तो सर्टेन है।
இவருடையது நிச்சயிக்கப்பட்டது ஆகும்.

इनको कहते हैं - हे बच्चे। तो यह अर्जुन हुआ ना। रथ पर बैठा है ना। बच्चे खुद भी समझ सकते हैं - हम जन्म कैसे लेंगे?
இவருக்குக் கூறுகின்றார்: - ஹே குழந்தையே! ஆக அர்ஜுன் ஆகிவிடுகிறார் அல்லவா! இரதத்தில் அமர்ந்திருக்கிறார் அல்லவா! நாம் எவ்வாறு பிறப்பு எடுப்போம்? என்பதை குழந்தைகளும் தானே புரிந்து கொள்ள முடியும்.

सर्विस ही नहीं करते हैं तो सतयुग नई दुनिया में पहले कैसे आयेंगे?
சேவையே செய்ய வில்லையெனில் சத்யுக புது உலகில் முத-ல் எப்படி வருவீர்கள்?

इनकी तकदीर कहाँ है।
இவர்களுக்கு அதிஷ்டம் எங்கு இருக்கிறது?

पीछे जो जन्म लेंगे उनके लिए तो पुराना घर होता जायेगा ना। मैं इनके लिए कहता हूँ, जिनके लिए तुमको भी सर्टेन है।
கடைசியில் பிறப்பு எடுக்கின்றவர்களுக்கு பழைய வீடாக ஆகிக் கொண்டே போகும் அல்லவா! நான் இவருக்காக கூறுகிறேன், அவருடையது நிச்சயமானது என்று நீங்களும் கூறுகிறீர்கள்.

तुम भी समझ सकते हो - मम्मा-बाबा 84 जन्म लेते हैं।
மம்மா, பாபா 84 பிறவிகள் எடுக்கின்றனர் என்பதை நீங்களும் புரிந்து கொள்ள முடியும்.

कुमारका है, जनक है, ऐसे-ऐसे महारथी जो हैं वह 84 जन्म लेते हैं।
குமார்கா, (பிரகாஷ் மணி தாதி) ஜனக் (ஜானகி தாதி) போன்ற மகாரதிகளும் 84 பிறவிகள் எடுக்கின்றனர்.

जो सर्विस नहीं करते हैं तो जरूर कुछ जन्म बाद में आयेंगे।
யார் சேவை செய்யவில்லையோ அவர்கள் அவசியம் சில பிறவிகளுக்குப் பின் வருவார்கள்.

समझते हैं हम तो नापास हो जायेंगे, पिछाड़ी में आ जायेंगे।
நாம் தோல்வியடைந்து விட்டோம், கடைசியில் வருவோம் என்பதைப் புரிந்து கொள்கின்றனர்.

स्कूल में दौड़ी पहन निशाने तक आकर फिर वापिस लौटते हैं ना। सब एकरस हो न सकें।
பள்ளியில் ஓட்டப் பந்தயத்தில் ஓடி எல்லை வரை சென்று விட்டு பிறகு மீண்டும் திரும்பி வருவர் அல்லவா! அனைவரும் ஒன்று போல இருக்க முடியாது.

रेस में ज़रा पाव इंच का भी फर्क पड़ता है तो प्लस में आ जाता है, यह भी अश्व रेस है।
போட்டியில் சிறிதளவு கால் இன்ச் வித்தியாசம் ஏற்பட்டு விடும் பொழுது முன்னேறி விடுகின்றனர், இதுவும் குதிரைப் பந்தயம் ஆகும்.

अश्व घोड़े को कहा जाता है।
அஸ்வம் என்றால் குதிரையாகும்.

रथ को भी घोड़ा कहा जाता है।
இரதமும் குதிரை என்று கூறப்படுகிறது.

बाकी यह जो दिखाते हैं दक्ष प्रजापिता ने यज्ञ रचा, उसमें घोड़े को हवन किया, यह सब बातें हैं नहीं।
மற்றபடி பிரஜாபிதா தட்சன் யாகம் வளர்த்தார், அதில் குதிரைகளை அர்ப்பணித்தார் என்று கூறுவது போன்ற விசயம் ஏதுமில்லை.

न दक्ष प्रजापिता है, न कोई यज्ञ रचा है।
பிரஜாபிதா தட்சனும் கிடையாது, எந்த யக்ஞத்தையும் படைக்க வில்லை.

पुस्तकों में भक्ति मार्ग की कितनी दन्त कथायें हैं।
புத்தகங்களில் பக்தி மார்க்கத்தின் எவ்வளவு கட்டுக் கதைகள் இருக்கின்றன! அதன் பெயரே கதை. பல கதைகளைக் கேட்கின்றனர்.

उनका नाम ही कथा है।
நீங்கள் இதைப் படிக்கிறீர்கள்.

बहुत कथायें सुनते हैं।
பல கதைகளைக் கேளுங்கள்.

तुम तो यह पढ़ते हो।
நீங்கள் இதைப் படியுங்கள்.

पढ़ाई को कथा थोड़ेही कहेंगे।
படிப்பை ஒரு பொழுதும் கதை என்று கூறுவது கிடையாது.

स्कूल में पढ़ते हैं, एम ऑब्जेक्ट रहती है।
பள்ளியில் படிப்பு கற்பிக்கப்படுகிறது, இலட்சியம், குறிக்கோள் இருக்கிறது.

हमको इस पढ़ाई से यह नौकरी मिलेगी।
நமக்கு இந்த படிப்பின் மூலம் இந்த வேலை கிடைக்கும்.

कुछ न कुछ मिलता है।
ஏதாவது கிடைக்கவே செய்கிறது.

अभी तुम बच्चों को देही-अभिमानी बहुत बनना है।
இப்பொழுது குழந்தைகளாகிய நீங்கள் அதிகம் ஆத்ம அபிமானிகளாக ஆக வேண்டும்.

यही मेहनत है।
இது தான் உழைப்பாகும்.

बाप को याद करने से ही विकर्म विनाश होंगे।
தந்தையை நினைவு செய்வதன் மூலம் தான் விகர்மங்கள் விநாசம் ஆகும்.

खास याद करना होता है, ऐसे नहीं कि मैं तो शिवबाबा का बच्चा हूँ ना फिर याद क्या करें।
குறிப்பாக நினைவு செய்ய வேண்டியிருக்கிறது, நான் தான் சிவபாபா வின் குழந்தையாக ஆகிவிட்டேன் அல்லவா! பிறகு ஏன் நினைவு செய்ய வேண்டும் என்று இருந்து விடக்கூடாது.

नहीं, याद करना है अपने को स्टूडेन्ट समझकर।
தன்னை மாணவன் என்று உணர்ந்து நினைவு செய்ய வேண்டும்.

हम आत्माओं को शिवबाबा पढ़ा रहे हैं, यह भी भूल जाते हैं।
ஆத்மாக் களாகிய நமக்கு சிவபாபா ஆன்ம கல்வியை கற்பித்துக்

கொண்டிருக்கின்றார் என்பதையும் மறந்து விடுகிறீர்கள்.

शिवबाबा एक ही टीचर है जो सृष्टि के आदि-मध्य-अन्त का राज़ सुनाते हैं, यह भी याद नहीं रहता है।
சிவபாபா என்ற ஒரே ஒரு ஆசிரியர் தான் சிருஷ்டியின் முதல், இடை, கடையின் இரகசியத்தைக் கூறுகின்றார் என்ற நினைவும் இருப்பது கிடையாது.

हर एक बच्चे को अपने दिल से पूछना है कि कितना समय बाप की याद ठहरती है?
ஒவ்வொரு குழந்தையும் தனது உள்ளத்தில் கேட்டுக் கொள்ள வேண்டும் - எவ்வளவு நேரம் தந்தையின் நினைவு நிலைத்திருக்கிறது?

जास्ती टाइम तो बाहरमुखता में ही जाता है।
அதிக நேரம் வெளிநோக்கு முகத்தில் செல்லக் கூடாது.

यह याद ही मुख्य है।
இந்த நினைவு தான் முக்கியமானது.

इस भारत के योग की ही बहुत महिमा है।
பாரதத்தின் இந்த யோகாவிற்குத் தான் அதிக மகிமை இருக்கிறது.

परन्तु योग कौन सिखलाते हैं - यह किसको पता नहीं है।
ஆனால் யோகா கற்பிப்பது யார்? என்பது யாருக்கும் தெரியாது.

गीता में श्रीकृष्ण का नाम डाल दिया है।
கீதையில் கிருஷ்ணரின் பெயர் வைத்து விட்டனர்.

अब श्रीकृष्ण को याद करने से तो एक भी पाप नहीं कटेगा क्योंकि वह तो शरीरधारी है।
இப்பொழுது கிருஷ்ணரை நினைவு செய்வதன் மூலம் ஒரு பாவமும் கூட அழியாது. ஏனெனில் அவர் சரீரதாரி ஆவார்.

पांच तत्वों का बना हुआ है।
ஐந்து தத்துவங்களால் ஆக்கப்பட்டிருக்கிறது.

उनको याद किया तो गोया मिट्टी को याद किया, 5 तत्वों को याद किया।
அதை நினைவு செய்வது என்பது மண்ணை நினைவு செய்வது போன்றதாகும், 5 தத்துவங்களை நினைவு செய்வதாகும்.

शिवबाबा तो अशरीरी है इसलिए कहते हैं अशरीरी बनो, मुझ बाप को याद करो।
சிவபாபா அசரீரியாக இருக்கின்றார். அதனால் தான் அசரீரி ஆகுங்கள், தந்தை யாகிய என்னை நினைவு செய்யுங்கள் என்று கூறுகின்றார்.

कहते भी हो - हे पतित-पावन, वह तो एक हुआ ना। युक्ति से पूछना चाहिए - गीता का भगवान कौन?

ஹே பதீத பாவனனே! என்று கூறுகிறீர்கள் எனில் அவர் ஒருவர் ஆகிவிடுகிறார் அல்லவா! கீதையின் பகவான் யார்? என்று யுக்தியாகக் கேட்க வேண்டும்.

भगवान रचयिता तो एक होता है।
படைக்கக் கூடிய பகவான் ஒரே ஒருவராகத் தான் இருக்க முடியும்.

अगर मनुष्य अपने को भगवान कहलाते भी हैं तो ऐसे कभी नहीं कहेंगे कि तुम सब हमारे बच्चे हो।
ஒருவேளை மனிதன் தன்னை பகவான் என்று கூறிக் கொண்டாலும் நீங்கள் அனைவரும் என்னுடைய குழந்தைகள் என்று ஒருபொழுதும் கூறமாட்டார்.

या तो कहेंगे ततत्वम् या कहेंगे ईश्वर सर्वव्यापी है।
அப்படியே நடக்கட்டும் அல்லது ஈஸ்வரன் சர்வவியாபி என்று தான் கூறுவார்.

हम भी भगवान, तुम भी भगवान, जिधर देखता हूँ तू ही तू है।
நானும் பகவான் தான், நீங்களும் பகவான் தான், எங்கு பார்த்தாலும் நீயாகத் தான் தென்படுகின்றாய்.

पत्थर में भी तू, ऐसे कह देते।
கல்-லும் நீ தான் என்று கூறி விடுகின்றனர்.

तुम हमारे बच्चे हो, यह कह नहीं सकते।
நீங்கள் என்னுடைய குழந்தைகள் என்று கூற முடியாது.

यह तो बाप ही कहते हैं - हे मेरे लाडले रूहानी बच्चों। ऐसे और कोई कह न सके।
இவ்வாறு தந்தை தான் கூறுகின்றார் - ஹே என்னுடைய செல்லமான ஆன்மீகக் குழந்தைகளே! இவ்வாறு வேறு யாரும் கூற முடியாது.

मुसलमान को अगर कोई कहे मेरे लाडले बच्चों, तो थप्पड़ मार दें।
முஸ்லீம்களை யாராவது என்னுடைய செல்லமான குழந்தைகளே! என்று யாராவது கூறினால் அடித்து விடுவர்.

यह एक ही पारलौकिक बाप कह सकते हैं।
இவ்வாறு ஒரே ஒரு பரலௌகீகத் தந்தை மட்டுமே கூற முடியும்.

और कोई सृष्टि के आदि-मध्य-अन्त का ज्ञान दे न सके।
வேறு யாரும் சிருஷ்டியின் முதல், இடை, கடையின் ஞானத்தைக் கொடுக்க முடியாது.

84 के सीढ़ी का राज़ कोई समझा न सके सिवाए निराकार बाप के।
நிராகார தந்தையைத் தவிர வேறு யாரும் 84 பிறவியின் இரகசியத்தைப் புரிய வைக்க முடியாது.

उनका असली नाम ही है शिव।
அவரது உண்மையான பெயர் சிவன்.

यह तो मनुष्यों ने अथाह नाम रख दिये हैं।
அவருக்கு மனிதர்கள் எண்ணிலடங்கா பெயர்களை வைத்து விட்டனர்.

अनेक भाषायें हैं।
பல மொழிகள் உள்ளன.

तो अपनी-अपनी भाषा में नाम रख देते हैं।
ஆக அவரவர்களது மொழியில் பெயர் வைத்து விடுகின்றனர்.

जैसे बाम्बे में बबुलनाथ कहते हैं, परन्तु वह अर्थ थोड़ेही समझते।
மும்பையில் பபூல்நாத் என்று கூறுகின்றனர், ஆனால் அவர்கள் பொருள் புரிந்து கொள்வது கிடையாது.

तुम समझते हो कांटों को फूल बनाने वाला है।
முட்களை மலர்களாக ஆக்கக் கூடியவர் என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள்.

भारत में शिवबाबा के हजारों नाम होंगे, अर्थ कुछ नहीं जानते।
பாரதத்தில் சிவபாபாவிற்கு ஆயிரக் கணக்கில் பெயர்கள் இருக்கின்றன, பொருள் அறிந்து கொள்வது கிடையாது.

बाप बच्चों को ही समझाते हैं।
தந்தை குழந்தைகளுக்குத் தான் புரிய வைக்கின்றார்.

उसमें भी माताओं को बाबा जास्ती आगे करते हैं।
அதிலும் தாய்மார்களை பாபா அதிகம் முன்னால் வைக்கின்றார்.

आजकल फीमेल्स का मान भी है क्योंकि बाप आये हैं ना। बाप माताओं की महिमा ऊंच करते हैं।
இன்றைய நாட்களில் பெண்களுக்கு மகிமை இருக்கிறது, ஏனெனில் தந்தை வந்திருக்கின்றார் அல்லவா! தந்தை தாய்மார்களின் மகிமையை உயர்வாக்குகின்றார்.

तुम शिव शक्ति सेना हो, तुम ही शिवबाबा को जानते हो।
நீங்கள் சிவசக்தி சேனைகள், நீங்கள் தான் சிவபாபாவை அறிவீர்கள்.

सच तो एक ही है।
சத்தியமானவர் ஒரே ஒருவர் ஆவார்.

गाया भी जाता है सच की बेड़ी हिले डुले, डूबे नहीं।
சத்தியம் என்ற படகு ஆடும், அசையும், ஆனால் மூழ்காது என்று பாடப்பட்டிருக்கிறது.

तो तुम सच्चे हो, नई दुनिया की स्थापना कर रहे हो।
ஆக நீங்கள் சத்தியமானவர்கள், புது உலகை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறீர்கள்.

बाकी झूठी बेड़ियां सब खत्म हो जायेंगी।
மற்றபடி பொய்யான படகுகள் அனைத்தும் அழிந்து விடும்.

तुम भी कोई यहाँ राज्य करने वाले नहीं हो।
நீங்களும் இங்கு இராஜ்யம் செய்யக் கூடியவர்கள் கிடையாது.

तुम फिर दूसरे जन्म में आकर राज्य करेंगे।
நீங்கள் அடுத்த பிறவியில் வந்து இராஜ்யம் செய்வீர்கள்.

यह बड़ी गुप्त बातें हैं जो तुम ही जानते हो।
இது மிகவும் குப்தமான விசயமாகும், இதை நீங்கள் தான் அறிகிறீர்கள்.

यह बाबा न मिला होता तो कुछ भी नहीं जानते थे।
இந்த பாபா கிடைத்திருக்காவிடில் எதையும் அறியாமல் இருந்திருப்பீர்கள்.

अभी जाना है।
இப்பொழுது அறிந்திருக்கிறீர்கள்.

यह है युधिष्ठिर, युद्ध के मैदान में बच्चों को खड़ा करने वाला।
இவர் யுதிஷ்டர் ஆவார், யுத்த மைதானத்தில் குழந்தைகளை நிறுத்தக் கூடியவர்.

यह है नानवायोलेन्स, अहिंसक।
இவர்கள் அகிம்சாதாரிகள் ஆவர்.

मनुष्य हिंसा समझ लेते हैं मारा-मारी को।
மனிதர்கள் சண்டையிடுவது தான் இம்சை என்று நினைக்கின்றனர்.

बाप कहते हैं पहली मुख्य हिंसा तो काम कटारी की है इसलिए काम महाशत्रु कहा है, इन पर ही विजय पानी है।
ஆனால் தந்தை கூறுகின்றார் - முதல் முக்கிய இம்சை காமத்தில் செல்வதாகும். அதனால் தான் காமம் மிகப் பெரிய எதிரி என்று கூறுகின்றார். இதன் மீது தான் வெற்றியடைய வேண்டும்.

मूल बात है ही काम विकार की, पतित माना विकारी।
முக்கிய விசயமே காம விகாரமாகும், பதீதம் என்றால் விகாரியாகும்.

विकारी कहा ही जाता है पतित बनने वाले को, जो विकार में जाते हैं।
பதீதம் ஆகக் கூடியவர்கள் தான் விகாரி என்று கூறப்படுகின்றனர், அவர்கள் விகாரத்தில் செல்கின்றனர்.

क्रोध करने वाले को ऐसे नहीं कहेंगे कि यह विकारी है।
கோபப்படுகின்றவரை இவர் விகாரி என்று கூறுவது கிடையாது.

क्रोधी को क्रोधी, लोभी को लोभी कहेंगे।
கோபப்படுபவரை கோபப்படுபவர், பேராசை உள்ளவரை பேராசைப்படுபவர் என்று கூறுவர்.

देवताओं को निर्विकारी कहा जाता है।
தேவதைகள் விகாரமற்றவர்கள் என்று கூறப்படுகின்றனர்.

देवतायें निर्लोभी, निर्मोही, निर्विकारी हैं।
தேவதைகள் பேராசையற்றவர்களாக, பற்றற்றவர்களாக, விகாரமற்றவர்களாக இருப்பர்.

वह कभी विकार में नहीं जाते।
அவர்கள் ஒருபொழுதும் விகாரத்தில் செல்லமாட்டார்கள்.

तुमको कहते हैं विकार बिगर बच्चे कैसे होंगे?
விகாரமின்றி குழந்தை எப்படி பிறக்கும்? என்று உங்களிடத்தில் கேட்கின்றனர்.

उन्हों को तो निर्विकारी मानते हो ना। वह है ही वाइसलेस दुनिया।
அவர்களை விகாரமற்றவர்கள் என்று ஏற்றுக் கொள்கிறீர்கள் அல்லவா! அந்த உலகமே விகாரமற்ற உலகமாகும்.

द्वापर कलियुग है विशश दुनिया।
துவாபர, க-யுகம் விகார உலகமாகும்.

खुद को विकारी, देवताओं को निर्विकारी कहते तो हैं ना। तुम जानते हो हम भी विकारी थे।
தன்னை விகாரி என்றும், தேவதைகளை விகாரமற்றவர்கள் என்றும் கூறுகின்றனர் அல்லவா! நாமும் விகாரிகளாக இருந்தோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

अब इन जैसा निर्विकारी बन रहे हैं।

இப்பொழுது இவர்களைப் போன்று விகார மற்றவர்களாக ஆகிக் கொண்டிருக்கிறோம்.

इन लक्ष्मी-नारायण ने भी याद के बल से यह पद पाया है फिर पा रहे हैं।
இந்த இலட்சுமி நாராயணனும் கூட நினைவு பலத்தின் மூலம் இந்த பதவி அடைந்திருக்கின்றனர், மீண்டும் அடைந்து கொண்டிருக்கின்றனர்.

हम ही देवी-देवता थे, हमने कल्प पहले ऐसे राज्य पाया था, जो गँवाया, फिर हम पा रहे हैं।
நாம் தான் தேவி தேவதைகளாக இருந்தோம், நாம் கல்பத்திற்கு முன்பு இவ்வாறு இராஜ்யம் அடைந்திருந் தோம், எதை இழந்தோமோ அதை மீண்டும் அடைந்து கொண்டிருக்கிறோம்.

यही चिंतन बुद्धि में रहे तो भी खुशी रहेगी।
இந்த சிந்தனை மட்டுமே புத்தியில் இருந்தால் குஷி ஏற்படும்.

परन्तु माया यह स्मृति भुला देती है।
ஆனால் இந்த நினைவை மாயை மறக்க வைத்து விடுகிறது.

बाबा जानते हैं तुम स्थाई याद में रह नहीं सकेंगे।
உங்களால் நிலையான நினைவில் நிலைத்திருக்க முடியாது என்பதை பாபா அறிவார்.

तुम बच्चे अडोल बन याद करते रहो तो जल्दी कर्मातीत अवस्था हो जाए और आत्मा वापिस चली जाए।
குழந்தைகளாகிய நீங்கள் உறுதியானவர்களாகி நினைவு செய்து கொண்டே இருந்தால் விரைவில் கர்மாதீத நிலை ஏற்பட்டு விடும் மற்றும் ஆத்மா திரும்பிச் சென்று விடும்.

परन्तु नहीं।
ஆனால் அவ்வாறு கிடையாது.

पहले नम्बर में तो यह जाने वाला है।
முதல் நம்பரில் செல்லக் கூடியவர் இவர் ஆவார்.

फिर है शिवबाबा की बरात।
பிறகு சிவபாபாவின் ஊர்வலம் நடைபெறும்.

शादी में मातायें मिट्टी के मटके में ज्योति जगाकर ले जाती हैं ना, यह निशानी है।
திருமணத்தின் பொழுது தாய்மார்கள் மண் பானையில் தீபம் ஏற்றி எடுத்துச் செல்வார்கள் அல்லவா! இது அடையாளமாகும்.

शिवबाबा साजन तो सदा जागती ज्योत है।

சிவபாபா என்ற நாயகன் சதா சுடர் விட்டுக் கொண்டிருக்கும் தீபமாவார்.

बाकी हमारी ज्योति जगाई है।
மற்றபடி நமது தீபம் ஏற்றப்பட்டிருக்கிறது.

यहाँ की बात फिर भक्ति मार्ग में ले गये हैं।
இங்கிருக்கும் விசயத்தை பிறகு பக்தி மார்க்கத்தில் கொண்டு சென்று விட்டனர்.

तुम योगबल से अपनी ज्योति जगाते हो।
நீங்கள் யோக பலத்தின் மூலம் தனது தீபத்தை ஏற்றுகிறீர்கள்.

योग से तुम पवित्र बनते हो।
யோகா மூலம் நீங்கள் தூய்மையாக ஆகிறீர்கள்.

ज्ञान से धन मिलता है।
ஞானத்தின் மூலம் செல்வம் கிடைக்கிறது.

पढ़ाई को सोर्स ऑफ इनकम कहा जाता है ना। योगबल से तुम खास भारत और आम सारे विश्व को पवित्र बनाते हो।
படிப்பு தான் வருமானத்திற்கு வழி என்று கூறப்படுகிறது அல்லவா! யோக பலத்தின் மூலம் நீங்கள் பொதுவாக முழு உலகையும் குறிப்பாக பாரதத்தை தூய்மையாக ஆக்குகிறீர்கள்.

इसमें कन्यायें बहुत अच्छी मददगार बन सकती हैं।
இதில் கன்னிகைகள் மிகவும் நன்றாக உதவியாளர்களாக ஆக முடியும்.

सर्विस कर ऊंच पद पाना है।
சேவை செய்து உயர்ந்த பதவி அடைய வேண்டும்.

जीवन हीरे जैसा बनाना है, कम नहीं।
வாழ்க்கையை வைரம் போன்று ஆக்கிக் கொள்ள வேண்டும், குறைந்தது கிடையாது.

गाया जाता है फालो फादर मदर।
தாய், தந்தையைப் பின்பற்றுங்கள் என்று கூறப்படுகிறது.

सी मदर फादर और अनन्य ब्रदर्स, सिस्टर्स।
தாய், தந்தை மற்றும் நெருக்கமான சகோதர சகோதரிகளைப் பாருங்கள்.

तुम बच्चे प्रदर्शनी में भी समझा सकते हो कि तुमको दो फादर हैं - लौकिक और पारलौकिक।

குழந்தைகளாகிய நீங்கள் கண்காட்சிகளிலும் புரிய வைக்க முடியும் - உங்களுக்கு இரண்டு தந்தைகள் உள்ளனர் - லௌகீகம் மற்றும் பரலௌகீகம்.

इसमें बड़ा कौन?
இதில் உயர்ந்தவர் யார்?

बड़ा तो जरूर बेहद का बाप हुआ ना।
உயர்ந்தவர் கண்டிப்பாக எல்லையற்ற தந்தையாவார் அல்லவா! ஆஸ்தி அவரிடமிருந்து அடைய வேண்டும்.

वर्सा उनसे मिलना चाहिए। अभी वर्सा दे रहे हैं, विश्व का मालिक बना रहे हैं।
இப்பொழுது ஆஸ்தியைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றார், உலகிற்கு எஜமானர்களாக ஆக்கிக் கொண்டிருக்கின்றார்.

भगवानुवाच - तुमको राजयोग सिखाता हूँ फिर तुम दूसरे जन्म में विश्व के मालिक बनेंगे।
பகவானின் மகாவாக்கியம் - உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன், பிறகு நீங்கள் அடுத்த பிறவியில் உலகிற்கு எஜமானர்களாக ஆவீர்கள்.

बाप कल्प-कल्प भारत में आकर भारत को बहुत साहूकार बनाते हैं।
தந்தை ஒவ்வொரு கல்பத்திலும் பாரதத்தில் வந்து பாரதத்தை மிகவும் செல்வந்த தேசமாக ஆக்குகின்றார்.

तुम विश्व के मालिक बनते हो इस पढ़ाई से।
நீங்கள் இந்தப் படிப்பின் மூலம் உலகிற்கு எஜமானர்களாக ஆகிறீர்கள்.

उस पढ़ाई से क्या मिलेगा?
அந்தப் படிப்பின் மூலம் என்ன கிடைக்கும்?

यहाँ तो तुम हीरे जैसा बनते हो 21 जन्म लिए।
இங்கு நீங்கள் 21 பிறவிகளுக்கு வைரம் போன்று ஆகிறீர்கள்.

उस पढ़ाई में रात-दिन का फर्क है।
அந்தப் படிப்பில் இரவு பகல் வித்தியாசம் இருக்கிறது.

यह तो बाप, टीचर, गुरू एक ही है।
இங்கு தந்தை, ஆசிரியர், குரு ஒரே ஒருவர் தான்.

तो बाप का वर्सा, टीचर का वर्सा और गुरू का वर्सा सब देते हैं।
ஆக தந்தையின் ஆஸ்தி, ஆசிரியரின் ஆஸ்தி மற்றும் குருவின் ஆஸ்தி அனைத்தையும் கொடுக்கின்றார்.

अब बाप कहते हैं देह सहित सबको भूलना है।
தேக சகிதமாக அனைத்தை யும் மறக்க வேண்டும் என்று தந்தை இப்பொழுது கூறுகின்றார்.

आप मुये मर गई दुनिया।
நீங்கள் இறந்து விட்டால் உலகம் இறந்து விடும்.

बाप के एडाप्टेड बच्चे बने, बाकी किसको याद करेंगे। दूसरों को देखते हुए जैसे कि देखते नहीं।
தந்தையின் தத்தெடுக்கப்பட்ட குழந்தைகளாக ஆகிவிட்ட பின்பு வேறு யாரை நினைவு செய்வீர்கள்! மற்றவர்களைப் பார்த்தாலும் பார்க்காதது போன்று இருங்கள்.

पार्ट में भी आते हैं परन्तु बुद्धि में है - अब हमको घर जाना है फिर यहाँ आकर पार्ट बजाना है।
நடிப்பை நடிப்பதற்கு வந்தாலும் இப்பொழுது நாம் வீட்டிற்குச் செல்ல வேண்டும், பிறகு இங்கு வந்து நடிப்பை நடிக்க வேண்டும் என்பது புத்தியில் இருக்கிறது.

यह बुद्धि में रहे तो भी बहुत खुशी रहेगी।
இது புத்தியில் இருந்தாலே அதிகக் குஷி ஏற்படும்.

बच्चों को देह भान छोड़ देना चाहिए।
குழந்தைகள் தேக உணர்வை விட்டு விட வேண்டும்.

यह पुरानी चीज़ यहाँ छोड़नी है, अब वापिस जाना है।
இந்த பழைய பொருளை இங்கு விட்டு விட வேண்டும். இப்பொழுது திரும்பிச் செல்ல வேண்டும்.

नाटक पूरा होता है। पुरानी सृष्टि को आग लग रही है।
நாடகம் முடிவடைகிறது, பழைய உலகம் எரிய ஆரம்பித்து விட்டது.

अन्धे की औलाद अन्धे अज्ञान नींद में सोये पड़े हैं।
குருடனின் வம்சம் குருடர்களாக அஞ்ஞான நித்திரையில் தூங்கிக் கொண்டிருக்கின்றனர்.

मनुष्य तो समझेंगे यह सोया हुआ मनुष्य दिखाया है।
இவர்கள் தூங்கிக் கொண்டிருக்கும் மனிதர்களைக் காண்பித்திருக் கின்றனர் என்று மனிதர்கள் நினைப்பர்.

परन्तु यह अज्ञान नींद की बात है, जिससे तुम जगाते हो।
ஆனால் இது அஞ்ஞான நித்திரையின் விசயமாகும். இதி-ருந்து நீங்கள் எழுப்புகிறீர்கள்.

ज्ञान अर्थात् दिन है सतयुग, अज्ञान अर्थात् रात है कलियुग।
ஞானம் என்றால் பகல் சத்யுகமாகும், அஞ்ஞானம் என்றால் இரவு க-யுகமாகும்.

यह बड़ी समझने की बातें हैं।
இது மிகவும் புரிந்து கொள்ள வேண்டிய விசயமாகும்.

कन्या शादी करती है तो माता-पिता, सासू-ससुर आदि भी याद आयेगा।
கன்னியாவிற்கு திருமணம் ஆகிவிட்டால் அவருக்கு தாய், தந்தை, மாமியார், மாமனார் போன்றவர்களின் நினைவும் வரும்.

उनको भूलना पड़े।
அவர்களை மறக்க வேண்டியிருக்கும்.

ऐसे भी युगल हैं, जो संन्यासियों को दिखाते हैं - हम युगल बनकर कभी विकार में नहीं जाते हैं।
இப்படி கூட ஜோடியாக வாழ்கின்றனர். அவர்கள் சந்நியாசி களுக்கும் கூறுகின்றனர் - நாங்கள் கணவன் மனைவியாக இருந்தும் ஒருபொழுதும் விகாரத்தில் செல்வது கிடையாது.

ज्ञान तलवार बीच में है।
ஞான அம்பு நடுவில் இருக்கிறது.

बाप का फरमान है - पवित्र रहना है।
தூய்மையாக இருங்கள் என்பது தான் தந்தையின் கட்டளையாகும்.

देखो रमेश-उषा हैं, कभी भी पतित नहीं बने हैं, यह डर है अगर हम पतित बनें तो 21 जन्मों की राजाई खत्म हो जायेगी। देवाला मार देंगे।
இரமேஷ் - உஷாவைப் பாருங்கள், ஒருபொழுதும் பதீதம் ஆக வில்லை. ஒருவேளை நாம் பதீதம் ஆகிவிட்டால் 21 பிறவிக்கான இராஜ்யம் அழிந்து விடும், திவால் ஆகிவிடுவோம் என்ற பயம் இருக்கிறது.

ऐसे कोई-कोई फेल हो पड़ते हैं। गन्धर्वी विवाह का नाम तो है ना।
கந்தர்வ விவாஹம் என்ற பெயர் இருக்கிறது அல்லவா! இதில் சிலர் தோல்வி அடைந்து விடுகின்றனர்.

तुम जानते हो पवित्र रहने से पद बहुत ऊंच मिलेगा।
தூய்மையாக இருப்பதனால் பதவி மிகவும் உயர்ந்ததாக கிடைக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

एक जन्म के लिए पवित्र बनना है।
ஒரே ஒரு பிறப்பிற்கு தூய்மையாக ஆக வேண்டும்.

योगबल से कर्मेन्द्रियों पर भी कन्ट्रोल आ जाता है।
யோக பலத்தின் மூலம் கர்மேந்திரியங்களின் மீதும் கட்டுப்பாடு வந்து விடுகிறது.

योगबल से तुम सारी दुनिया को पवित्र बनाते हो।
யோக பலத்தின் மூலம் நீங்கள் முழு உலகையும் தூய்மையாக ஆக்குகிறீர்கள்.

तुम कितने थोड़े बच्चे योगबल से यह सारा पहाड़ उड़ाए सोने का पहाड़ स्थापन करते हो।
மிகக் குறைந்த குழந்தைகளாகிய நீங்கள் யோக பலத்தின் மூலம் இந்த முழு மலையையும் நீக்கி தங்க மலையை ஸ்தாபனை செய்கிறீர்கள்.

मनुष्य थोड़ेही समझते हैं, वह तो गोवर्धन पर्वत पिछाड़ी परिक्रमा देते रहते हैं।
மனிதர்கள் இதைப் புரிந்து கொள்வது கிடையாது, அவர்கள் கோவர்தன மலையைச் சுற்றிக் கொண்டிருக்கின்றனர்.

यह तो बाप ही आकर सारी दुनिया को गोल्डन एजेड बनाते हैं।
தந்தை வந்து தான் இந்த முழு உலகையும் தங்க யுகமாக ஆக்குகின்றார்.

ऐसे नहीं कि हिमालय कोई सोने का हो जायेगा।
அதற்காக இமயமலை தங்கம் போன்று ஆகிவிடும் என்பது கிடையாது.

वहाँ तो सोने की खानियाँ भरतू हो जायेंगी।
அங்கு தங்கக் களஞ்சியம் நிறைந்து இருக்கும்.

5 तत्व सतोप्रधान हैं, फल भी अच्छा देते हैं।
5 தத்துவங்கள் சதோ பிரதானமாக இருக்கும். நல்ல பழங்களைக் கொடுக்கும்.

सतोप्रधान तत्वों से यह शरीर भी सतोप्रधान होते हैं।
சதோ பிரதான தத்துவத்தினால் இந்த சரீரமும் சதோ பிரதானமாக இருக்கும்.

वहाँ के फल भी बहुत बड़े-बड़े स्वादिष्ट होते हैं।
அங்கிருக்கும் பழங்களும் மிகப் பெரியதாக, சுவையானதாக இருக்கும்.

नाम ही है स्वर्ग।
பெயரே சொர்க்கம் ஆகும்.

तो अपने को आत्मा समझ बाप को याद करने से ही विकार छूटेंगे।
ஆக தன்னை ஆத்மா என்று உணர்ந்து தந்தையை நினைவு செய்தால் தான் விகாரங்கள் நீங்கும்.

देह-अभिमान आने से विकार की चेष्टा होती है।
தேக அபிமானத்தில் வருவதன் மூலம் தான் விகாரத்தின் சேஷ்டை ஏற்படுகிறது.

योगी कभी विकार में नहीं जायेंगे।
யோகி ஒருபொழுதும் விகாரத்தில் செல்லமாட்டார்.

ज्ञान बल तो है, परन्तु योगी नहीं होगा तो गिर पड़ेगा।
ஞான பலம் இருக்கவே செய்கிறது, ஆனால் யோகியாக இல்லையெனில் கீழே விழுந்து விடுவீர்கள்.

जैसे पूछा जाता है - पुरूषार्थ बड़ा या प्रालब्ध?
முயற்சி பெரியதா? அல்லது பிராப்தி பெரியதா? என்று கேட்கப்படுகிறது.

तो कहते हैं पुरूषार्थ बड़ा।
முயற்சி தான் பெரியது என்று கூறுகிறோம்.

वैसे इसमें कहेंगे योग बड़ा।
அதே போன்று இதில் பெரியது யோகா ஆகும்.

योग से ही पतित से पावन बनते हैं।
யோகா மூலம் தான் பதீதத்தி-ருந்து பாவனம் ஆகிறீர்கள்.

अब तुम बच्चे तो कहेंगे हम बेहद के बाप से पढ़ेंगे।
நாம் எல்லையற்ற தந்தையிடத்தில் படிக்கிறோம் என்று இப்பொழுது குழந்தை களாகிய நீங்கள் கூறுவீர்கள்.

मनुष्य से पढ़ने से क्या मिलेगा?
மனிதர்களிடத்தில் படிப்பதனால் என்ன கிடைக்கும்?

मास में क्या कमाई होगी?
மாதத்திற்கு என்ன வருமானம் கிடைக்கும்?

यह तुम एक-एक रत्न धारण करते हो।
இந்த ஒவ்வொரு இரத்தினத்தையும் நீங்கள் தாரணை செய்கிறீர்கள்.

यह है लाखों रूपयों के।
இது இலட்சம் ரூபாய்க்கு சமமாகும்.

वहाँ पैसे की गिनती नहीं की जाती।

அங்கு பணத்தை கணக்கிடுவது கிடையாது.

अनगिनत धन होता है।
அளவற்ற செல்வம் இருக்கும்.

सबको अपनी-अपनी खेतियां आदि होती हैं।
அனைவருக்கும் அவரவர்களுக்கென்று களஞ்சியங்கள் இருக்கும்.

अब बाप कहते हैं हम तुमको राजयोग सिखलाते हैं।
நான் உங்களுக்கு இராஜயோகம் கற்பிக்கிறேன் என்று இப்பொழுது தந்தை உங்களுக்குக் கூறுகின்றார்.

यह है एम ऑब्जेक्ट।
இது தான் இலட்சியம், குறிக்கோள் ஆகும்.

पुरूषार्थ करके ऊंच बनना है।
முயற்சி செய்து உயர்ந்த நிலையடைய வேண்டும்.

राजधानी स्थापन हो रही है।
இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது.

इन लक्ष्मी-नारायण ने कैसे प्रालब्ध पाई, इनकी प्रालब्ध को जान गये तो बाकी क्या चाहिए।
இந்த இலட்சுமி நாராயணன் எப்படி பிராப்தி அடைந்தனர்? இவர்கள் பிராப்தியை அறிந்து கொண்ட பின்பு வேறு என்ன வேண்டும்?

अभी तुम जानते हो कल्प 5 हज़ार वर्ष बाद बाप आते हैं, आकर भारत को स्वर्ग बनाते हैं।
கல்பத்திற்கு பின் 5 ஆண்டிற்குப் பிறகு தந்தை வருகின்றார் என்பதை நீங்கள் அறிவீர்கள், வந்து பாரதத்தை சொர்க்கமாக ஆக்குகின்றார்.

तो बच्चों को सर्विस करने का उमंग होना चाहिए।
ஆக குழந்தைகளுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும்.

जब तक कोई को रास्ता नहीं बताया है, खाना नहीं खायेंगे - इतना उल्लास-उमंग हो तब ऊंच पद पा सकते हैं।
எதுவரை யாருக்காவது வழி காட்டவில்லையோ உணவு சாப்பிடமாட்டேன் - இந்த அளவிற்கு ஆர்வம் உற்சாகம் இருக்கும் பொழுது தான் உயர்ந்த பதவியடைய முடியும்.

अच्छा!
நல்லது.

मीठे-मीठे सिकीलधे बच्चों प्रति मात-पिता बापदादा का याद-प्यार और गुडमॉर्निंग।
இனிமையிலும் இனிய, தேடிக் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம்.

रूहानी बाप की रूहानी बच्चों को नमस्ते।
ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

धारणा के लिए मुख्य सार:-
தாரணைக்காண முக்கிய சாரம்:

1) ईश्वरीय सर्विस कर अपना जीवन 21 जन्मों के लिए हीरे जैसा बनाना है।
1) ஈஸ்வரிய சேவை செய்து தனது வாழ்க்கையை 21 பிறவிகளுக்கு வைரம் போன்று ஆக்கிக் கொள்ள வேண்டும்.

मात-पिता और अनन्य भाई-बहिनों को ही फालो करना है।
தாய், தந்தை மற்றும் பாபாவிற்கு நெருக்கத்திலுள்ள மூத்த சகோதர சகோதரிகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.

2) कर्मातीत अवस्था बनाने के लिए देह सहित सबको भूलना है।
2) கர்மாதீத நிலை அடைவதற்காக தேக சகிதமாக அனைத்தையும் மறக்க வேண்டும்.

अपनी याद अडोल और स्थाई बनानी है।
தனது நினைவை ஆடாது மற்றும் நிலையானதாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

देवताओं जैसा निर्लोभी, निर्मोही, निर्विकारी बनना है।
தேவதைகளைப் போன்று பேராசையற்றவர்களாக, பற்றற்றவர்களாக, விகாரமற்றவர்களாக ஆக வேண்டும்.

वरदान:तड़फती हुई आत्माओं को एक सेकण्ड में गति-सद्गति देने वाले मास्टर दाता भव
வரதானம்:துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு ஒரு நொடியில் கதி, சத்கதி கொடுக்கக்கூடிய மாஸ்டர் வள்ளல் ஆகுக.

जैसे स्थूल सीजन का इन्तजाम करते हो, सेवाधारी सामग्री सब तैयार करते हो जिससे किसी को कोई तकलीफ न हो, समय व्यर्थ न जाए।
எவ்வாறு யாருக்கும் எந்த கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடாது என்று ஸ்தூல சீசனுக்காக ஏற்பாடு செய்கின்றீர்களோ, சேவாதாரிகள், பொருட்கள் ஆகிய அனைத்தையும் தயார் செய்கின்றீர் களோ, அதுபோன்றே இப்பொழுது அனைத்து ஆத்மாக்களுக்கும் கதி, சத்கதியைக் கொடுப்பதற்கான இறுதி சீசன் வரப்போகின்றது,

ऐसे ही अब सर्व आत्माओं की गति-सद्गति करने की अन्तिम सीजन आने वाली है, तड़फती हुई आत्माओं को क्यू में खड़ा करने का कष्ट नहीं देना है, आते जाएं और लेते जाएं।
துடித்துக் கொண்டிருக்கும் ஆத்மாக்கள் வரிசையில் நிற்பதற்கான கஷ்டத்தை கொடுக்கக்கூடாது, வரவேண்டும் மற்றும் பெற்றுக் கொண்டு செல்ல வேண்டும்.

इसके लिए एवर-रेडी बनो।
இதற்காக எவரெடி ஆகுங்கள்.

पुरूषार्थी जीवन में रहने से ऊपर अब दातापन की स्थिति में रहो।
புருˆô ர்த்தியாக வாழ்வதை விட மேலாக இப்பொழுது வள்ளல் தன்மையின் ஸ்திதியில் இருங்கள்.

हर संकल्प, हर सेकण्ड में मास्टर दाता बन करके चलो।
ஒவ்வொரு எண்ணம், ஒவ்வொரு நொடியில் மாஸ்டர் வள்ளலாகி நடங்கள்.

स्लोगन:हजूर को बुद्धि में हाजिर रखो तो सर्व प्राप्तियां जी हजूर करेंगी।
சுலோகன்:இறைவனை புத்தியில் நிறைத்து வைத்துக்கொண்டீர்கள் என்றால் அனைத்து பிராப்திகளும் வந்தேன் எனது பிரபுவே என்று வந்துவிடும்.

अव्यक्त इशारे - एकान्तप्रिय बनो एकता और एकाग्रता को अपनाओ
அவ்யக்த சமிக்ஞை - ஏகாந்தப்பிரியர் ஆகுங்கள், ஒற்றுமை மற்றும் ஏகாக்ரதாவை தனதாக்குங்கள்

एकता के साथ एकान्तप्रिय बनना है। एकान्तप्रिय वह होगा जिनका अनेक तरफ से बुद्धियोग टूटा हुआ होगा और एक का ही प्रिय होगा।
ஒற்றுமையின் கூடவே ஏகாந்தப்பிரியர் ஆகவேண்டும், யாருடைய புத்தியோகம் அனேக பக்கங்களில் இருந்து துண்டிக்கப்பட்டு இருக்குமோ மற்றும் ஒருவருக்கு மட்டும் பிரியமானவராக இருப்பாரோ, அவரே ஏகாந்தப்பிரியராக இருப்பார்.

एक प्रिय होने कारण एक की ही याद में रह सकता।
ஒருவர் மீது பிரியம் கொண்டிருக்கும் காரணத் தினால் ஒருவருடைய நினைவில் மட்டும் இருக்கமுடியும்.

एकान्तप्रिय अर्थात् एक के सिवाय दूसरा न कोई।
ஏகாந்தப்பிரியர் என்றால் ஒருவரைத் தவிர வேறு யாரும் இல்லை என்பதாகும்.

सर्व सम्बन्ध, सर्व रसनाएं एक से लेने वाला ही एकान्त-प्रिय हो सकता है।
சர்வ சம்பந்தங்கள், சர்வ இரசனைகளை ஒருவரிடம் இருந்து பெறக்கூடியவர்கள் தான் ஏகாந்தப்பிரியர் ஆகமுடியும்.